ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

දේශීය මෙහෙයුම් කටයුතු දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்
Domestic Operations Department

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: 35/01/005/0007/14

2019 பெப்புருவரி 22

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

ஒதுக்குத் தேவைப்பாடுகள்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நாணயவிதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்க அமுலாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்டு 2019 பெப்புருவரி 22ஆம் திகதிய 2111/50ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி “ஈ” மூலம் திருத்தப்பட்டவாறான அறிவித்தலின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் இலங்கை ரூபாவில் மாற்றப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக, அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தின் ஐந்து சதவீதத்திற்கு (5.00 சதவீதம்) சமமான தொகையினை ஒதுக்குகளாகப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

3. 2018 நவெம்பர் 14ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/007/13ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அட்டவணை அ இணைக்கப்பட்டுள்ள 'அட்டவணை அ' மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது.

4. மேற்குறிப்பிட்ட திருத்தம் 2019 மாச்சு 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2013 ஏப்பிறல் 22ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 35/01/005/007/06 மற்றும் 35/01/005/007/07 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடையதானவாக இருக்கும்.

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

7 වන මහල, 2 වන කුළුණ
අංක 30, ජනාධිපති මාවත
තැ.පෙ. 590, කොළඹ 01, ශ්‍රී ලංකාව

தளம் 7, கோபுரம் 2
இல. 30, சனாதிபதி மாவத்தை
த.பெ 590, கொழும்பு 01, இலங்கை

Level 7, Tower 2
No. 30, Janadhipathi Mawata
P.O. Box 590, Colombo 01, Sri Lanka

+94 112 477036 | +94 112 346287 | ddod@cbsl.lk | www.cbsl.gov.lk

அட்டவணை அ

அறிக்கைப் படிவம்

நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை

வங்கியின் பெயர் ..........................................................................................................................

(..............................................) தொடக்கம் (............................................) வரையான காலத்திற்கானது.

திகதி திகதி

சேரல் : பணிப்பாளர்
உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு வேலை நாள் முடிவிலும் வங்கியின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i) கேள்வி வைப்புக்கள் | (ii) தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | (iii) நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள்/ ஏற்றுகொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் | (iv) அனைத்து ஏனைய வைப்புப் பொறுப்புக்கள்[1] |
|---|---|---|---|
| | | | |

[1] வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும்.

## வேண்டப்படும் ஒதுக்குகள்

.................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. விடயத்திற்கு ஏற்றவாறு<br>அ.<br>(i) 'மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அல்லது<br>(ii) 'மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 சுற்றறிக்கையின்<br>கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு<br>அத்துடன்<br>ஆ. 2018 ஒத்தோபர் 11ஆம் திகதியிடப்பட்ட 2018இன் 2ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுகொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் நியதிகள் மீதான இறக்குமதிகளுக்கு<br>எதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லை வைப்புக்களின் 100 சதவீதம். | |
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் 5 சதவீதம். | |
| 3. மேலே 1 மற்றும் 2இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் 2 சதவீதம், ஆயினும் 4 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தின் (1+2-3) மீது பேணப்படுவதற்கு வேண்டப்படும் மொத்த ஒதுக்குகள். | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/ சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :..............................

.............................................
உத்தியோகபூர்வ கையொப்பம்

குறிப்பு -

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.